# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1825 - 2013 අගෝස්තු මස 23 වැනි සිකුරාදා - 2013.08.23

*1825 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1124 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1133 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஓகத்து மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

B2-B80750

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, புரட்டாதி மாதம் 23 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஆவணி 06.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | கொரண | முனகம பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் ரைகம கோரளை பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், களுத்துறை |

8-742

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, புரட்டாதி மாதம் 23 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஆவணி 07.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | அம்பகமுவ | ஹற்றன்-டிக்கோயா நகரப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், நுவரெலியா |

8-782

---

## அரச சேவைகள் ஆணைக்குழு

அரச கரும மொழிகள் திணைக்களம்

### அரச கரும மொழிகள் திணைக்களத்தின் மொழிபெயர்ப்புக்களின் கண்காணிப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2013

அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகுதியான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. மொழிபெயர்ப்புக்களின் கண்காணிப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்)- 01 பதவி
2. மொழிபெயர்ப்புக்களின் கண்காணிப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) - 01 பதவி
3. மொழிபெயர்ப்புக்களின் கண்காணிப்பாளர் (சிங்களம்/தமிழ்) - 01 பதவி

2. தெரிவானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றினால் நடாத்தப்படும் படிமுறையிலமைந்த நேர்முகப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

3. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 20,030-365 x 11-500 x 18-ரூபா 33,045 (ஆரம்ப சம்பளம்-ரூபா 22,200)

4. இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

5. **தகைமைகள்**.- பின்வரும் தகைமைகள் மொழிபெயர்ப்புக்களின் கண்காணிப்பாளர் பதவிகளுக்கு (சிங்களம்/ ஆங்கிலம்), (தமிழ்/ ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஏற்புடையன.

5.1 *கல்வித் தகைமைகள்.*- **மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்)** .- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சிங்கள மொழியினை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மொழிபெயர்ப்பில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அத்துடன்

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் அதிவிசேட சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல்.

**மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து தமிழ் மொழியினை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மொழிபெயர்ப்பில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அத்துடன்

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் அதிவிசேட சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல்.

**மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் (சிங்களம்/தமிழ்) :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சிங்களம் அல்லது தமிழ் மொழியினை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மொழிபெயர்ப்பில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்

அத்துடன்

தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரர்களுக்கு.- க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்கள மொழியில் அதிவிசேட சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் சிங்கள மொழியில் சாதாரண சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல்.

சிங்கள மொழி மூலமான விண்ணப்பதாரர்களுக்கு.- க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் தமிழ் மொழியில் அதிவிசேட சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் தமிழ் மொழியில் சாதாரண சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல்.

5.2 அனுபவம் :

(i) விண்ணப்பதாரர் இணைந்த சேவையின் வகுப்பு I அல்லது விசேட தரத்தில் உள்ள மொழிபெயர்ப்பாளராக 06 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவையினைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) விண்ணப்பதாரர் அரச கரும மொழிகள் திணைக்களத்தில் உள்ள மொழிபெயர்ப்பாளராக 05 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவையினைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) விண்ணப்பதாரர் அரச கரும மொழிகள் திணைக்களத்தில் உள்ள மொழிபெயர்ப்பு உதவியாளராக 10 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவையினைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

5.3 *உடல் தகைமைகள்.-* ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இந்தப் பதவியிலுள்ள கடமைகளினை ஆற்றுவதற்குப் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கையின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

5.4 *ஏனையவை.-* இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவைப்படும் அனைத்துத் தகைமைகளின் அனைத்து விடயங்களினையும் விண்ணப்பங்கள்/வர்த்தமானி மூலம் கோரும் அறிவுறுத்தலில் குறித்துரைக்கப்பட்ட திகதி அன்று பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு முறை**.- ஆட்சேர்ப்பு படிமுறையிலமைந்த நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

| *மதிப்பீட்டின் துறைகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|
| (1) மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| (2) பதவியுடன் தொடர்பில் அடையப்பெற்ற தொழில்சார் அனுபவம் | 35 |
| (3) பதவியுடன் தொடர்புற்ற துறையினுள் அடையப்பெற்ற மேலதிக அனுபவம் | 35 |
| (4) நேர்முகப் பரீட்சையில் மதிப்பிடப்பட்ட திறன் | 05 |
| மொத்தம் | 100 |

6.1 பதவி வெற்றிடங்கள் படிமுறையிலமைந்த நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட திறமையின் அடிப்படையில் கூடுதலான புள்ளிகளினைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களிலிருந்து நிரப்பப்படும்.

| | | |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் (ஆகக்கூடிய புள்ளிகள்-25) | (i) குறித்த இரண்டு மொழிகளையும் மட்டத்தின் பாடங்களாகக் கொண்டிருத்தல் | - 10 புள்ளிகள் |
| | (ii) பட்டப்பின் படிப்பு தகைமையைப் பெற்றிருத்தல் :- | |
| | (அ) விண்ணப்பிக்கும் மொழிகளுக்குரிய ஆய்வுக்கட்டுரை குறைந்தது முதுமானி தரத்திலான தகைமை | - 15 புள்ளிகள் |
| | அல்லது | |
| | (ஆ) விண்ணப்பிக்கும் மொழிகளுக்குரிய ஆய்வுக் கட்டுரையற்ற குறைந்தது முதுமானி தரத்திலான தகைமை | - 10 புள்ளிகள் |
| | அல்லது | |
| | (இ) ஏனைய எந்தவொரு பட்டப்பின் படிப்பு தகைமை | - 05 புள்ளிகள் |
| 2. பதவிக்கேற்ப பெற்றுள்ள மொழித் தகைமைகள் (ஆகக்கூடிய புள்ளிகள் 35) | (i) மொழிபெயர்ப்பு குறித்து குறைந்தது ஒரு வருட கால பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல் | - 20 புள்ளிகள் |
| | அல்லது | |
| | மொழிபெயர்ப்பு குறித்து குறைந்தது ஒரு வருட கால டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல் | - 10 புள்ளிகள் |
| | அல்லது | |
| | மொழிபெயர்ப்பு குறித்து வேறு பாடநெறியொன்றைக் கற்றிருத்தல் | - 05 புள்ளிகள் |
| | (ii) பட்டத்தின் ஒரு பாடமாகக் கற்றிராது, விண்ணப்பிக்கும் இரு மொழி களில் ஒரு மொழிக்கு டிப்ளோமா தகைமையைக் கொண்டிருத்தல் | - ஆகக்கூடிய புள்ளிகள் 05 |
| | (iii) விண்ணப்பிக்கும் இரு மொழிகளில் மும்மொழித் தேர்ச்சியை உறுதிப் படுத்தும் தகைமை (ஒரு மொழிக்கு 2 ரீதியில்) | - ஆகக்கூடிய புள்ளிகள் 06 |
| | (iv) விண்ணப்பித்துள்ள இரு மொழிகளுக்கு அல்லது அவற்றுள் மும்மொழியில் உள்ளடங்காத மொழி அறிவு (ஒரு மொழிக்கு 2 வீதம்) | - ஆகக்கூடிய புள்ளிகள் 04 |

| | | |
|---|---|---|
| 3. பதவிக்கேற்ப பெற்றுள்ள மேலதிக அனுபவம் (ஆகக்கூடிய புள்ளிகள் 35) | (i) பதவிக்கேற்ப பெறவேண்டிய கட்டாய அனுபவத்திற்கு மேலதிகமாக அரசாங்க சேவையின் மொழிபெயர்ப்பு அனுபவம் மேலதிக ஒவ்வொரு வருடத்திற்காகவும் 01 புள்ளி என்ற ரீதியில் | - ஆகக்கூடிய புள்ளிகள் 10 |
| | (ii) மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளராக பணியாற்றி இருத்தல் | - ஆகக்கூடிய புள்ளிகள் 04 |
| | (iii) மொழிபெயர்ப்பு பயிலுனராகப் பணியாற்றியிருத்தல் | - ஆகக்கூடிய புள்ளிகள் 03 |
| | (iv) நேர்முகப் பரீட்சை சபைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தரத்தினாலான மொழிபெயர்ப்பு அல்லது மொழி ஒலிப்பெயர்த்த நூலுக்கு 01 புள்ளி என்ற ரீதியில் | - ஆகக்கூடிய புள்ளிகள் 03 |
| | (v) மொழிபெயர்ப்பு அதிகாரியாகப் பணியாற்ற தனது ஆற்றலை உறுதிப்படுத்தும் முன்வைப்பு<br><br>(மொழிபெயர்ப்பு சிக்கல்களைத் தீர்க்கும் முறை, மொழிபெயர்ப்பு பற்றிய கோட்பாட்டறிவு, மொழிப் பிரவேசமும் ஆரம்பமும், உரைபெயர்ப்பு, கலைச் சொற்களைத் திரட்டுதல் மற்றும் சொற்றொகுதிகளைத் தயாரித்தல், பாரிய மொழிபெயர்ப்புக் கருத்திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்தல் மற்றும் ஒருங்கிணைப்பு, மொழிபெயர்ப்பு வகைகளுக்கேற்ப மொழிபெயர்ப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களுக்கு அறிவுரை வழங்குதல் என்பனவும் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளுக்காக மொழிபெயர்ப்புக் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பிற்கு கணனித் தொழிநுட்பப் பாவனை மற்றும் MS Office package இல் உயர் அறிவு TRADOS, OMEGAT, WORDPAST போன்ற கணனியுடனான மொழிபெயர்ப்பு மென்பொருள் தொடர்பான அறிவும் அனுபவமும் கலந்துரையாடப்படும்.) | - புள்ளிகள் 15 |
| 4. நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டிய திறமை (ஆகக்கூடிய புள்ளிகள் 05) | தலைமைத்துவ ஆளுமை, சமர்ப்பிக்கும் முறை ஆகிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படும். | - புள்ளிகள் 05 |

7. விண்ணப்பம் துல்லியமான தகவல்களுடன் கவனமாகப் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் இந்த ஆட்சேர்ப்புப் பரீட்சையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தகைமையற்றவர் என நேர்முகப் பரீட்சைக்கு முன்னரோ, நேர்முகப் பரீட்சையின் பொழுதோ அல்லது அதன் பின்னரோ அல்லது அதற்குப் பிறகு வேறு ஏதேனும் சந்தர்ப்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் பரீட்சைத் தன்மை இரத்துச்செய்யப்பட முடியும். விண்ணப்பதாரரினால் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தகவல் எந்தச் சந்தர்ப்பத்திலாவது தவறானது அல்லது பிழையானது எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாக நேரிடும்.

8. விண்ணப்பங்கள் ஏ4 அளவு (24 செ. மீ. x 29 செ. மீ.) தாளில் தயாரிக்கப்படல் வேண்டும்.-

(அ) முதல் பக்கத்தில் 01 தொடக்கம் 3:4 வரையிலானவை இருத்தல் வேண்டும்

(ஆ) இல. 4 உம் அதற்கு மேற்பட்டவையும் மறுபக்கத்தில் இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்களினைத் தயாரிக்கையில், சிங்கள மொழி மூலமான விண்ணப்பதாரர்களினால் நிரப்பப்படுகின்ற விண்ணப்பங்களின் மேல்மூலையில் தலைப்பினை சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்பட வேண்டும். தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரர்களினால் நிரப்பப்படுகின்ற விண்ணப்பங்களின் மேல்மூலையில் தலைப்பினை தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

8.1 விண்ணப்பங்களினைச் சேர்த்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "மொழிபெயர்ப்பு கண்காணிப்பாளர் பதவி (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) - 2013" என்ற பதங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

8.2 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கீழ்வரும் முகவரிக்கு 23.09.2013 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் :

அரச கரும மொழிகள் ஆணையாளர்,
அரச கரும மொழிகள் திணைக்களம்,
இல. 341/7, 'பாஷா மந்திரய',
கோட்டே வீதி,
இராஜகிரி.

9. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழுவே தீர்மானிக்கும். விண்ணப்பதாரர்கள் அனைவரும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட பொதுவான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

எம். எஸ். விக்கிரமசிங்க,
செயலாளர்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு,
இல. 40, புத்கமுவ வீதி,
இராஜகிரிய,
2013.08.06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

மொழி பெயர்ப்புக்களின் கண்காணிப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிக்கான விண்ணப்பப்படிவம்

Application for the Post of Superintendent of Translations (Sinhala/English), (Tamil/English) & (Tamil/Sinhala)

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

விண்ணப்பிக்கும் பதவி [ ]
(உரிய இலக்கத்தினைக் சுட்டிக்காட்டவும்)

1. மொழி பெயர்ப்புக் கண்காணிப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்)
2. மொழி பெயர்ப்புக் கண்காணிப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்)
3. மொழி பெயர்ப்புக் கண்காணிப்பாளர் (சிங்களம்/தமிழ்)

1. பெயர் :----.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) Mr./Mrs./Miss :----.
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | | ]

2. முகவரி :

2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.3 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.4 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3.

3.1 பால் : [ ]
(பெண்-1, ஆண்-2)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 குடியியல் நிலைமை : [ ]
விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.3 பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

3.4 2013.09.23 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

4. கல்வித் தகைமைகள் :

4.1 (அ) பட்டம் : ..........................................................................

(ஆ) பட்டம் பெற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் மற்றும் ஆண்டு : ..........................................................................

(இ) பட்டத்தின் பாடங்கள் : ..........................................................................

4.2 க. பொ. த. (உயர் தரம்) :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

4.3 க. பொ. த. (சாதாரண தரம்) :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

5. 5.1 சேவை/பதவி :----.

5.2 வகுப்பு :----.

5.3 2013.08.23 ஆந் திகதியன்று அரசாங்கத்தின்கீழ் மொத்த சேவைக்காலப் பகுதி (வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியில்)

ஆண்டுகள் :----. மாதங்கள் :----.

5.4 தற்போதைய வருடாந்த சம்பளம் :
ரூபா :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் சரியானவை என்று வெளிப்படுத்துகின்றேன். மேலும் ஆட்சேர்ப்புப் பரீட்சையின் நிபந்தனைகளுக்கு அமைவாக நான் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ தகைமையற்றவன் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் எனது பரீட்சைத் தன்மையினை இரத்துச்செய்யும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுகிறேன்.

2013 ............................................ ஆந் திகதிக்கு அண்மித்த 5 வருடங்களின் அனைத்துச் சம்பள ஏற்றங்களினையும் நான் உழைத்துப் பெற்றேன் என்பதனையும் ஒழுக்காற்று நடவடிக்கையின் பெறுபேறாக விதிக்கப்பட்ட தண்டனை (எச்சரிக்கைகள் தவிர) எதனையும் அனுபவிக்கவில்லை என்பதையும் நான் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுபடுத்தல் :**

நான் இத்தால் இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................... அவர்கள் இந்த அலுவலகத்தில் ............................................... தொடக்கம் பணிபுரிகின்றார் என்றும் அவரின் வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்திகரமானவை என்றும் நான் இந்த அலுவலகத்தில் பேணப்படும் பதிவேடுகளினை உபயோகித்து மேற்கூறப்பட்ட தகவல்கள் அனைத்தினையும் பரீட்சித்தேன் என்றும் அவை சரியானவை என்றும் அவர் என் முன்னிலையில் தன் கையொப்பத்தினை 2013 ......................................... ஆந் திகதி இட்டார் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி முத்திரை :----.
அலுவலக முத்திரை :----.
திகதி :----.

8-706

---

**சுதேச மருத்துவ அமைச்சு**

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காக விண்ணப்பம் கோரல்

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காக ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள மத்திய அரசில்/மாகாண சபையில்/உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) (அ) **ஆயுர்வேதத் திணைக்களத்தின் மருத்துவ உத்தியோகத்தர் வகை :**

(i) ஆயுர்வேதத் திணைக்களத்தின் மருத்துவ உத்தியோகத்தர் தரத்தின் தரம் இரண்டில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்திசெய்திருத்தல் ; மற்றும்

(ii) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு II இல் குறிப்பிட்டுள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பட்டப்பின் படிப்பு நிறுவகம் ஒன்றில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சான்றிதழொன்றினை அல்லது அதிலும் கூடிய கல்வித் தகைமை ஒன்றினைப் பெற்றிருத்தல்

(ஆ) **ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகத்தின் மருத்துவ உத்தியோத்தர் (ஆராய்ச்சி) வகை :**

(i) ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகத்தின் மருத்துவ உத்தியோகத்தர் (ஆராய்ச்சி) வகையின் தரம் இரண்டில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத ஒருவராக இருத்தல் ; மற்றும்

(ii) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டப்பின் படிப்பு நிறுவகம் ஒன்றில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல் ; அல்லது

(iii) ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகத்தின் மருத்துவ உத்தியோகத்தர் (ஆராய்ச்சி) வகையின் தரம் இரண்டில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத ஒருவராக இருத்தல் ; மற்றும்

(iv) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டப்பின் படிப்பு நிறுவகம் ஒன்றில் பட்டப்பின் படிப்பு பட்டம் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல் ; அல்லது

(v) அரச அல்லது உள்ளூராட்சி சேவையின் மருத்துவர் ஒருவராக (15) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைக் கொண்டிருத்தல் ; அல்லது அரச மற்றும் உள்ளூராட்சி சேவையின் மருத்துவர் ஒருவராக (15) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைக் கொண்டிருத்தல்.

(vi) ஆயுர்வேத ஆராய்ச்சி பற்றிய சிறந்த அனுபவம் பெற்ற மருத்துவர் ஒருவராக இருத்தல்.

(இ) **ஆயுர்வேத மருத்துவ முறை பற்றிய தேசிய நிறுவகத்தின் மருத்துவ உத்தியோகத்தர் (கல்வி) வகை :**

(i) சுதேச மருத்துவ முறை பற்றிய தேசிய நிறுவகத்தின் மருத்துவ உத்தியோகத்தர் (கல்வி) வகையின் முதலாம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் ; மற்றும்

(ii) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பட்டப்பின் படிப்பு பட்டம் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல் ; அல்லது

(iii) சுதேச மருத்துவ முறை பற்றிய தேசிய நிறுவகத்தின் மருத்துவ உத்தியோகத்தர் (கல்வி) வகையின் தரம் இரண்டில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் ; அல்லது

(iv) அரச அல்லது உள்ளூராட்சி சேவையின் மருத்துவர் ஒருவராக (15) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைக் கொண்டிருத்தல் ; அல்லது அரச மற்றும் உள்ளூராட்சி சேவையில் (15) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினைக் கொண்டிருத்தல் ; மற்றும்

(v) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரசாங்கத் தினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு நிறுவகம் ஒன்றில் பட்டப்பின் படிப்பு பட்டம் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல் ; மற்றும்

(vi) கற்பித்தல் பணிகள் பற்றி போதிய அனுபவமிக்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

(2) **அனுமதிக்கப்பட்ட பதவிகள் :**

| | தொகை |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்), சுதேச மருத்துவ அமைச்சு | 01 |
| உதவி ஆணையாளர் (தொழில்நுட்பம்), ஆயுர்வேதத் திணைக்களம் | 01 |
| மாகாண ஆயுர்வேத ஆணையாளர் (மாகாண சபைகள்) | 09 |
| பணிப்பாளர் (போதனா வைத்தியசாலை) | 03 |
| பணிப்பாளர் (மாகாண வைத்தியசாலை) | 09 |
| பிரதிப் பணிப்பாளர் (போதனா வைத்தியசாலை) | 03 |
| | 26 |

1996.01.01 ஆந் திகதி முதல் இதுவரையில் ஒவ்வொரு ஆறு மாதத்திலும் ஏற்படுகின்ற விசேட தரத்திற்கான வெற்றிடங்களுக்கு (உதாரணம் : 1996.01.01, 1996.07.01 ................................ என்றவாறு) பதவி உயர்வு வழங்கப்படுவதனால் அத்தினத்தன்று மேற்படி தகைமைகளைப் பூர்த்திசெய்யும் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

ஓய்வுபெறும்போது மேற்படி தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களும் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

(3) மேலே குறிப்பிட்டவாறு தகைமைகளைப் பூர்த்திசெய்யும் உத்தியோகத்தர்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் (விண்ணப்பப்படிவத்தை www.ayurveda.gov.lk இலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.) தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் ஒன்றின் மூலம் 2013.09.21 ஆந் திகதிக்கு முன்னர் திணைக்களத் தலைவரின் ஊடாகவும் தற்போது ஓய்வுபெற்றுள்ள ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட முறையிலும் ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்ன, மஹரகம எனும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இலங்கைப் பாராளுமன்ற மருத்துவ சேவை உத்தியோகத்தர் களை விசேட தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காக விண்ணப்பம் கோரல் எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(4) விசேட தரத்தைச் சேர்ந்த பதவியொன்றின் ஆரம்ப சம்பள படிமுறை பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் எஸ்எல்-1-2006 இன் பிரகாரம் (ரூ. 22,935-10X645-8X790-17X1,050-53,555) சம்பள அளவுத் திட்டத்தின் 20 ஆவது சம்பள படிமுறையாகும்.

(5) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைக்குரிய புள்ளிகள் பற்றிய விபரம் பின்வருமாறு :

1. **சேவை மூப்பு** **(உச்சம் 50 புள்ளிகள்)**

ஆயுர்வேத மருத்துவர் தரம் II இல் திருப்திகரமான 08 வருட சேவைக்காலத்திற்கு மேலதிகமாக தரம் II இல் பணியாற்றியுள்ள ஒவ்வொரு வருடத்திற்கும் 03 புள்ளிகள் வீதம் மற்றும் தரம் I இல் பணியாற்றியுள்ள ஒவ்வொரு வருடத்திற்கும் 05 புள்ளிகள் வீதம்.

2. **கல்வித் தகைமைகள் :** **(உச்சம் 20 புள்ளிகள்)**

ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு III இல் உள்ளடக்கப்பட்டுள்ள யாதேனுமொரு விடயம் தொடர்பாக அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்ளூர்/வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றிலே அல்லது உள்ளூர்/வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு கற்கை நிறுவகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்டுள்ள பட்டப்பின் படிப்பு தகைமைகளுக்காக-

(a) விஞ்ஞான முதுமானி (M.Sc) - 05 புள்ளிகள்
(b) மருத்துவ முதுமானி (MD) - 10 புள்ளிகள்
(c) தத்துவ முதுமானி (M.Phil) - 12 புள்ளிகள்
(d) கலாநிதி (Ph.D) - 15 புள்ளிகள்

(பட்டப் பின்படிப்பு டிப்ளோமா ஒன்று இல்லாது பட்டப்பின்படிப்பு பட்டமொன்றினை மாத்திரம் பெற்றிருப்பின் அது ஆகக்குறைந்த தகைமையாகக் கருதப்படும்.)

3. **வினைத்திறன்காண் தடைப்பரீட்சை** **(உச்சம் 20 புள்ளிகள்)**

(a) ஆயுர்வேத மருத்துவ சபையினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட, ஆயுர்வேத மருத்துவத் துறையின் முன்னேற்றம் கருதி வெளியிட்டுள்ள நூல்களுக்கு - 10 புள்ளிகள்

(b) துறையுடன் தொடர்புடையதாக வெளியிட்டுள்ள அறிக்கைகள்/புத்தகங்கள் என்பவற்றிற்கு - 05 புள்ளிகள்

4. **அனுபவம் :** **(உச்சம் 10 புள்ளிகள்)**

மருத்துவமனை நிருவாகத்துடன் தொடர்புடைய அனுபவத்திற் காக வருடம் ஒன்றிற்கு 02 புள்ளிகள் வீதம்

(மொத்தப் புள்ளிகள் 100)

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

லலித் கன்னங்கர,
செயலாளர்.

சுதேச மருத்துவ அமைச்சு,
கொழும்பு 08,
2013.08.07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்த்துதல்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. முழுப்பெயர் :----.
3. பிறந்த திகதி :----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. தொலைபேசி இலக்கம் :----.
6. அலுவலக முகவரி :.....................................................................
.......................................................................................................
7. (a) முதல் நியமனத் திகதி :----.
   (b) தற்போதைய தரம் :----.
   (c) தரம் II இற்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
   (d) தரம் II இல் சேவைக்காலம் (வருடங்கள்) :----.
   (e) தரம் I இற்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
   (e) தரம் I இல் சேவைக்காலம் (வருடங்கள்) :----.
8. பெற்றுக்கொண்டுள்ள பட்டப்பின்படிப்பு பட்டம் பற்றிய தகைமைகள் (இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம்) :

| நிறுவனம் | பாடநெறியின் பெயர் | காலம் | பூர்த்திசெய்த திகதி (பயிற்சிக்காலம் உட்பட) |
|---|---|---|---|
| | | | |
| | | | |

9. பெற்றுக்கொண்டுள்ள பட்டம்/ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு II/III இன் பிரகாரம் எந்த பாடத் திட்டத்தின்கீழ் வரும் என்பது பற்றிய விபரம் :.........................
.......................................................................................................

என்னால் மேலே குறிப்பிட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் மற்றும் சரியானதுமென உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பம்.

திகதி :----.

**நிறுவனத் தலைவரின் சிபாரிசு :**

திரு./திருமதி/செல்வி ..................................................................................
அவர்களினால் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காக சமர்ப்பித்துள்ள விண்ணப்பப் படிவம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், அதில் குறிப்பிடப் பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், முன்னைய 05 வருடகாலப் பகுதியினுள் குறித்த உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது*/மேற்கொள்ளப் படவில்லை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

*ஒழுக்காற்று நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதுபற்றி குறிப்பிடுதல் வேண்டும்.

(பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கப்பட மாட்டாது என்பதனை மேலும் அறியத்தருகிறேன்.

8-775

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**அரசசேவை ஆணைக்குழு**

## இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை - 2013

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் I ஆம் வகுப்பில் இருந்து விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை, 2013, திசெம்பர் மாதம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் தொழில்நுட்பவியல் சேவையின் I ஆம் வகுப்பில் 4 வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(i) இப்பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விசேட வகுப்பிலுள்ள 2012.07.03 ஆந் திகதி முதல் 2013.07.02 ஆந் திகதி வரையான வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

(ii) வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, விண்ணப்பதாரர்களி லிருந்து ஒவ்வொரு வெற்றிடமும் ஏற்பட்ட திகதியில் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் மாத்திரம் உரிய தரமுயர்விற்காக கவனத்திலெடுக்கப்படுவர்.

2. விசேட வகுப்பு அலுவலர்கள் தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள சம்பளத் திட்டம் செல்லுபடியாகும் :-

(MN-7-2006-A 4 ஆம் படிமுறை)

ரூபா 21,125-8 x 365 - 18 x 500 - ரூபா 33,045

**3. இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு I இல் இருந்து விசேட வகுப்பிற்கான தரமுயர்வு பின்வரும் வகையில் மேற்கொள் ளப்படும் :-**

(அ) விசேட வகுப்பிலுள்ள வெற்றிடங்களில் 40%, I ஆம் வகுப்பிற்கு தரமுயர்வு வழங்கப்பட்ட திகதியில் இருந்து 4 வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்ட உரிய பரீட்சையில் சித்தியடைந்த அலுவலர்கள் மூலம் நிரப்பப்படும்.

(ஆ) விசேட வகுப்பிற்கான வெற்றிடங்களில் 60%, வகுப்பு 1 இல் 6 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட தரமுயர்வு வழங்கப்பட்ட தினத்திற்கு கிட்டிய 5 வருடகாலப் பகுதியில் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்ட அலுவலர்களின் சேவை மூப்பினதும் திறமைகளினதும் அடிப்படையில் நிரப்பப்படும்.

(இ) விசேட வகுப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கை 5 ஐ விடக் குறைவாக இருப்பின் மேற்படி (அ) மற்றும் (ஆ) உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள வீதங்கள் பொருத்தமற்றதாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அலுவலர்களின் சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் குறித்த வெற்றிடங்கள் நிரப்பப்படுதல் வேண்டும்.

(ஈ) விசேட வகுப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கை 5 அல்லது அதனைவிடக் கூடுதலாக இருப்பினும் அவ்வருடத்தில் ஏற்பட்ட பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 4 அல்லது அதனைவிடக் குறைவாக இருப்பின் தர உயர்விற்கு தகுதிபெறும் அலுவலர்களின் சேவைமூப்பு மற்றும் திறமையின் அடிப்படையிலேயே பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும்.

(உ) மேலே (அ) மற்றும் (ஆ) ஆகிய உப பந்திகளிற்கு இணங்க பதவி வெற்றிடங்களை நிரப்பும்போது முதலில் (ஆ) பந்தியில் உள்ள வெற்றிடங்களும் இரண்டாவதாக (அ) பந்தியின் கீழான பதவி வெற்றிடங்களும் நிரப்பப்படல் வேண்டும்.

(ஊ) இலங்கை தொழில்நுட்ப சேவையின் I முதலாம் வகுப்பிலுள்ள அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்தும்போது ஆட்சேர்ப்புக்களின் திறமைகளை அளவிடுவதற்காக அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் தயாரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் திட்டத்தினை குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் சேர்ப்பதற்கு திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

(ii) இச்சட்டங்களை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் கட்டுப்படவேண்டிய நிலை உருவாகும். பரீட்சார்த்திகள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் வர்த்தமானியின் முதற்பகுதியில் தனியாக பிரசுரிக்கப்பட்டுள்ளன.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தைத் தயாரித்தல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும் மாகாண அரச சேவையிலுள்ள அலுவலர்கள் அவர்கள் பணிபுரியும் மாகாண சபையின் அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும் 2013, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை எழுதுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. **அடையாள அட்டைகள்**.- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திலும் மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய வகையில் தமது ஆள் அடையாளத்தை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களில் ஒன்றையேனும் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் பரீட்சைக்குத் தோற்றும் தகைமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் அடிப்படையில் இரத்துச் செய்யப்பட முடியும்.

7. **விண்ணப்பப்படிவம்**.- (i) "ஏ 4" அளவிலான தாளில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். 1 முதல் 6 வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சு மூலம் தயாரித்துக்கொள்ள முடியுமாயினும் அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் கையெழுத்தில் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் தாம் தோற்றும் மொழி மூலத்தில் விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். அதனால், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் இவ்அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்விண்ணப்பப்படிவத்தின் படிமப் பிரதியொன்றை வைத்திருப்பது சாலவும் சிறந்ததாகும்.

(ii) பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து அம்மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளித்தல் வேண்டும்.

(iii) முதற்தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறாயினும் அதன் பின்னர் தோற்றும் அலுவலர்கள் ரூபா 500 ஐப் பரீட்சைக் கட்டணமாக 2003-02-13 என்ற பரீட்சைத் திணைக்களத்தின் வருமானத் தலைப்புக்கு யாதேனும் பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்ட செயலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும்.

இப்பரீட்சைக்காகச் செலுத்திய கட்டணத்தை வேறு ஏதேனும் பரீட்சைக்கு மாற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

8. பரீட்சைக்கு விண்ணப்பித்த அலுவலர்கள் அனைவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணையும் பரீட்சை அனுமதி அட்டையும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறே பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொண்டுள்ளதாக கருதுதல் கூடாது.

விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்தினால் செய்தித் தாள்களில் அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்படும். அவ்அறிவித்தல் பிரசுரமாகி 2-3 நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அது தொடர்பில் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்" இற்கு உடனடியாகப் பின்வரும் தகவல்களுடன் தாமதிக்காமல் அறிவித்தல் வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் ;
(iii) முழுமையான விலாசம் ;
(iv) விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பிய அலுவலகம், பதிவுத்தபால் இலக்கம் மற்றும் அனுப்பிய திகதி.

உம்மிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியையும் பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டினையும், நீங்கள் கொழும்புக்கு வெளியில் வசிப்பவராயின் அனுமதி அட்டையை அனுப்பவேண்டிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தையும் குறிப்பிட்டு உமது கோரிக்கைக் கடிதத்தின் பிரதியொன்றை உம்மிடம் வைத்துக்கொண்டு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

9. மேலே (8) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

10. **பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்**.- இலக்கம் 5 இன்கீழ் மாகாண அரச சேவையிலுள்ள அலுவலர்களின் பெறுபேறு களை உரிய மாகாண அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கும் அரச சேவையிலுள்ள அலுவலர்களின் பெறுபேறுகளை பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கும் அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

11. **பரீட்சை நடைமுறைகள்**.- (i) I ஆம் வகுப்பிலுள்ள அலுவலர்களை விசேட வகுப்புக்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை 2 வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :-

(1) உளச்சார்புப் பரீட்சை (நேரம் : 1 1/2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(2) முகாமைவத்துவம் (நேரம் : 2 1/2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

தகுதிபெறுவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

முதலாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு :-

**உளச்சார்பு-பாட இலக்கம் (1).**- இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்தி களின் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு செய்யும் ஆற்றல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றை அளவிடக்கூடியதாக அமையும்.

இவ்வினாப்பத்திரத்தில் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

இரண்டாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு :-

**முகாமைத்துவம்-பாட இலக்கம் (2) :**

(i) முகாமைத்துவம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள்
(ii) முகாமைத்துவ தொழிற்பாடுகள் :

திட்டமிடல்
தீர்மானம் எடுத்தல்
தீர்மானம் எடுக்கும் நடைமுறைகள்
ஒழுங்கமைப்பு
பதவிநிலைப்படுத்தல்
செயற்படுத்தல்
ஊக்குவிப்புச் செயற்பாடுகள்
நிர்வாகம்
நிர்வாகக் கோட்பாட்டுச் செயற்பாடுகள்

(iii) பங்குபற்றல் முகாமைத்துவம்
(iv) முகாமைத்துவச் சூழல்
(v) விடய ஆய்வு

இது ஒரு கட்டமைப்பு வினாப்பத்திரமாகும். இதில் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

12. பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாகவும் மற்றும் பெறுபேறு களை வெளியிடுதல் தொடர்பாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். மேற்படி சட்டவிதிகளை மீறின் அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவார்.

13. இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் காணப்படாத யாதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் அரச சேவை ஆணைக்குழு வின் தீர்மானமே இறுதியானதாக அமையும்.

14. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் யாதேனும் இணக்கப்பாடின்மை காணப்படு மாயின் சிங்கள மொழியிலுள்ள வாசகமே செல்லுபடியானதாகும்.

அரசசேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2013.08.07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலகப் பயன்பாட்டுக்குரியது)

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை - 2013**

Examination for the Promotion of the Officers in Class I of Sri Lanka Technological Service to Special Class - 2013

1. (அ) பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : (சிங்களம்-2/தமிழ்-3/ஆங்கிலம்-4)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

(ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்களை இறுதியில் எழுதுக (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) : ----.
உதாரணம் : SILVA, A.B.

(இ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.

(ஈ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ----.

(உ) அலுவலக முகவரி (இம்முகவரிக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்படும்)
(ஆங்கிலத்தில்) :----.
(சிங்களத்தில்/தமிழில்) :----.

(ஊ) பால் (ஆண்-0/பெண்-1) :
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

(எ) தேசிய அடையாள அட்டை இலக்கம் :

(ஏ) தொலைபேசி இலக்கம் :

2. நீர் மாகாண அரச சேவையிலுள்ளவரா ? அல்லது அரச சேவையிலுள்ளவரா ? என்பது :----.

(அரச சேவை-1/மேல் மாகாண அரச சேவை-2/தென் மாகாண அரச சேவை-3/மத்திய மாகாண அரச சேவை-4/வடமேல் மாகாண அரச சேவை-5/சப்ரகமுவ மாகாண அரச சேவை-6/ஊவா மாகாண அரச சேவை-7/வடமத்திய மாகாண அரச சேவை-8/வடமாகாண அரச சேவை-9/கிழக்கு மாகாண அரச சேவை-10)

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

3. நீர் பணிபுரியும் திணைக்களம் :----.

4. பதவிப் பெயர் :----.

5. 2013.07.02 ஆந் திகதியன்று சேவைக்காலம் :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

6. (i) பிறந்த திகதி-
ஆண்டு மாதம் திகதி

(ii) 2013.07.02 ஆந் திகதியன்று வயது-
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை அல்லாதவிடத்து பரீட்சைக் கட்டணமான ரூபா 500 ஐச் செலுத்திய பற்றுச்சீட்டினை இவ்விடத்தில் நன்றாக ஒட்டுக. (பற்றுச்சீட்டின் படிமப் பிரதியொன்றை தம்மிடத்தில் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.)

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய அலுவலகம் :----.
செலுத்திய தொகை :----.

மேலே குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை என்றும், மேற்குறிப்பிட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துள்ளது என்றும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் பிரகடனப்படுத்துகின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவரின் சார்பில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் அல்லது தனது பிரதேச அலுவலகத் தலைவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

எனது அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவருமான திரு./ திருமதி/ செல்வி ................................................ என்பவர் .................................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் குறித்துறைத்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதனையும் மேற்படி பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

மேலே இல. 1 முதல் 6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும் இப்பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவர் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ள மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியானவர் என்பதையும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப்பெயரும்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி :----.

**குறிப்பு**.- உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று பரீட்சார்த்தியின் தனிப்பட்ட கோவைக்கு அனுப்பப்பட வேண்டும். மற்றைய பிரதி காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

8-760

## சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு

*மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2013*

*சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின், மகளிர் அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது 2013, நவெம்பர் மாதம் பரீட்சைகள் ஆணையாளரினால் கொழும்பில் நடாத்தப்படும். இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2013.09.20 ஆந் திகதி ஆகுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*2.* ***பரீட்சை ஒழுங்குமுறை.***- *இவ்வினைத்திறன்காண் தடைப் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும். இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளின் மூலம் மாத்திரம் நடைபெறும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது :-*

*பாட இலக்கம் 1 - நிதிப் பிரமாணம்/ அலுவலக நடைமுறை (நேரம் : 02 மணித்தியாலங்கள்)*
*— 100 புள்ளிகள்*

*பாட இலக்கம் 2 - ஆண்/பெண் சமூக அந்தஸ்தும் பெண்கள் உரிமைகளும் (நேரம் : 02 மணித்தியாலங்கள்)*
*— 100 புள்ளிகள்*

*பாட இலக்கம் 3 - சமூக விஞ்ஞானமும் உளவியல் ஆலோசனையும் (நேரம் : 02 மணித்தியாலங்கள்)*
*— 100 புள்ளிகள்*

**குறிப்பு :**

(அ) ஒரு அலுவலர் சகல பாடங்களுக்கும் ஒரே தடவையில் தோற்றுவதற்கு அல்லது தனித்தனியாக வெவ்வேறு தடவைகளில் தோற்றுவதற்கான அனுமதி உண்டு.

(ஆ) சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% புள்ளிகள் அல்லது அதற்குமேல் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(இ) ஒவ்வொரு வினாத்தாளும் கட்டாயம் பதிலளிக்கவேண்டிய வினாக்களைக் கொண்டவையாகும் :

**3. பாடங்கள் :**

3.1 பகுதி A - *நிதிப்பிரமாணம்*
இலங்கையின் அரசாங்க முகாமைத்துவ ஒழுங்கமைப்பு
நிதிக் கட்டுப்பாடும் வருடாந்த மதிப்பீடும்
(அரசாங்க நிதிப் பிரமாணங்கள் I ஆம் தொகுதியின் X ஆம் அத்தியாயத்தைத் தவிர)

பகுதி B - *அலுவலக நடைமுறை*
தாபன விதிக்கோவையின் கட்டளைகள்
அலுவலக முகாமைத்துவமானது, தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களில் உள்ளடங்குகின்றது :
(I, II, IV, V, VII, IX, XII, XV, XXIII, XXVI, XXVII, XXX, XXXI, XXXII, XXXIII)

3.2 *ஆண்/பெண் சமூக அந்தஸ்தும் பெண்கள் உரிமைகளும் :*
பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள்
இலங்கை சமூகத்தில் ஆண்/பெண் சமூக அந்தஸ்து
இலங்கை பெண்கள் பிரகடனமும் பெண்களின் உரிமைகளும்

3.3 *சமூக விஞ்ஞானமும், உளவியல் ஆலோசனையும் :*
கிராமிய சமூக விஞ்ஞானம்
இலங்கையில் நகரமயப்படுத்தல்
கிராம அபிவிருத்தி
உளவியல் ஆலோசனையின் அடிப்படை அம்சங்களும் ஒழுக்கநெறிகளும்
பெண்களும் உளவியல் முறைகேடுகளும்
இலங்கையின் ஆலோசனை அமைப்பும் ஆலோசனை வாய்ப்புகளும்

4. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பப்படிவங்களை தயார் செய்துகொள்ள வேண்டும். இந்த விண்ணப்பப்படிவமானது ஏ4 அளவான தாளில் இலக்கம் 1 முதல் 6 வரையும் முதல் பக்கத்திலும் ஏனைய பகுதிகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளவாறு தயார் செய்யப்படல் வேண்டும். பரீட்சார்த்திகள் தமது சொந்தக் கையெழுத்தில் இதனை நிரப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்துகொள்ளும் போது அதன் தலைப்பில் குறிப்பிடுகின்ற பரீட்சையின் பெயர் சிங்கள மொழி மூலமான விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கு எற்புடையதாவதுடன், விண்ணப்பங்களை அனுப்பிய பின்னர் அது தொடர்பில் இடம்பெறுகின்ற மாற்றங்கள் எதுவும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

5. விண்ணப்பப்படிவங்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக (பிரதேச செயலகமாயின் பிரதேச செயலாளர் ஊடாக) 2013.09.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல், வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

அரச கரும மொழிக் கொள்கை தொடர்பான நடவடிக்கைக்காக புதிய அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை அரச கரும மொழியில் அல்லது தாம் சேவையாற்ற ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள மொழிமூலத்திற்கு அமைவாக தமிழ் மொழியில்/ ஆங்கில மொழியில் தயார்செய்து சமர்ப்பிக்க முடியும்.

6. (i) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகளை வழங்கியவுடன், அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 நாட்கள் அல்லது 3 நாட்களின் பின்னரும் அனுமதி

அட்டைகள் கிடைக்காதபட்சத்தில், அதில் குறிப்பிடப்பட் டுள்ளவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துள்ள விண்ணப்பப் படிவத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துவது ஏற்புடையதாயின், குறித்த கட்டணத்தைச் செலுத்திய பின்னர் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி சகிதம், உங்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திடம் வினவுமாறு அறியத்தருவதுடன், கொழும்புக்கு வெளியே தூர இடங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரராயின், உங்களின் மேற்படி விபரங்கள் மற்றும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டையின் பிரதியை தொலைநகல் மூலம் உங்களுக்கு அனுப்புவதற்காக உங்களின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ள கோரிக்கைக் கடிதத்தை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும் :-

(ii) பரீட்சார்த்திகள் பரீட்சைக்குரிய அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதுடன், பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் நாளன்று பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டையை வழங்குவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப் பட்டதாகக் கருதப்படக் கூடாது.

7. **ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரியிடம் தமது ஆளடையாளத்தை உறுதிசெய்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ள செல்லுபடியான தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரர் ஒருவரின் பரீட்சார்த்தி அந்தஸ்தை இரத்துச்செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்ளாதிருக்கும் அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உண்டு.

8. **பரீட்சைக் கட்டணம்**.- இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணங்கள் அறவிடப் படும் :

| | பரீட்சைக் கட்டணம் | ரூ. ச. |
|---|---|---|
| (அ) | முதல் தடவைக்கு கட்டணம் அறவிடப்படுவதில்லை | |
| (ஆ) | முதல் தடவையின் பின்னர் முழுப் பரீட்சைக்கும் | 400.00 |
| (இ) | ஒரு பாடத்திற்கு | 200.00 |

பரீட்சைக் கட்டணமானது, சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சுச் செயலாளரின் வருமானத் தலைப்பு 2003-99-00 இற்கு செலவு வைக்கப்படக்கூடியவாறு பிரதேச செயலாளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் உறுதியாக ஒட்டுதல் வேண்டும். அதன் பிரதியொன்றை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

9. (i) பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இந்தப் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு பரீட்சை பரீட்சார்த்திகள் உட்படுகின்றனர். மேற்படி சட்டங்கள், விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கும் குறித்த ஆள் உட்படுதல் வேண்டும்.

(ii) பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்களினதும் பெறுபேறுகளை உள்ளடக்கிய பெறுபேற்று அட்டவணை, சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் செயலாளருக்கு வழங்கப் படும்.

10. இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதிபெற்றுள்ள மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வெளியிடப்பட்டுள்ள, தமது திணைக்களம்/ அலுவலகத்திலுள்ள அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக திணைக்கள/அலுவலகத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விடுமுறை வழங்குதல் வேண்டும்.

11. இதில் குறிப்பிடப்படாத யாதாயினுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பில் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சுச் செயலாளரின் விருப்பத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

செயலாளர்,
சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு.

சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு,
இல. 175ஏ, நாவலை வீதி,
நுகேகொடை.
2013.08.05.

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது தகுதிகாண் தடைப் பரீட்சை - 2013**

FIRST EFFICIENCY BAR EXAMINATION - 2013
FOR WOMEN DEVELOPMENT OFFICERS OF MINISTRY OF CHILD DEVELOPMENT AND WOMEN'S AFFAIRS

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

1. பெயர் :----.

1.1 முதலெழுத்துக்களுடனான பெயர் Mr./Mrs/Miss :----.
(முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
உதா : SILVA, A.B.

1.2 முதலெழுத்துக்களின் மூலம் குறிப்பிடும் பெயர் :----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. அலுவலக முகவரி :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

2.1 அலுவலக முகவரி :----.
(சிங்களத்தில்/தமிழில்)

2.2 அனுமதி சீட்டு அனுப்பவேண்டிய முகவரி :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

2.3 தொலைபேசி இலக்கம் :----.

3. பால் :

3.1 பெண்-1, ஆண்-0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 திருமணமானவரா/திருமணமாகாதவரா என்பது-
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2

3.3 பிறந்த திகதி :-

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு (2013.09.20) வயது :-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

4. சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர் பதவிக்கு நியமனம் பெற்றுள்ள திகதி (உறுதியாக கடமைகளைப் பொறுப்பேற்ற திகதியைக் குறிப்பிடுக.) :
----.

5. அரச மொழிக் கொள்கையின் குறிக்கோள்கள் தொடர்பில் முன்னதாகவே இணைந்துள்ளவரா ? அல்லது புதிதாக இணைந்தவரா ? :----.

6. திணைக்களத்தின் பெயர் (பிரதேச செயலகமாயின் அலுவலகத்தின் பெயர்) :----.

7. வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பந்தியின்கீழ் தோற்றுகின்ற பாடங்களும் பாட இலக்கங்களும் :

| பாடங்கள் | பாட இலக்கம் |
|---|---|
| 1. ...................................... <br> 2. ...................................... <br> 3. ...................................... | |

8. இந்தப் பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றுகின்றீரா ? :----.

9. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரம் :----.

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய திகதி :----.

பற்றுச்சீட்டை இங்கே உறுதியாக ஒட்டவும்.
(பிரதியொன்றை வைத்திருக்கவும்.)

10. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியானவை என்றும், மேலே குறிப்பிடப்பட்ட மொழிமூலம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எனக்கு உரிமையுள்ளதென்பதை தெரியப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைகளை நடாத்துவது தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களுக்கு நான் உட்படுகின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- விண்ணப்பதாரர் தமது திணைக்கள தலைவரின் முன்னிலையில் அல்லது திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு தத்துவமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவரின் முன்னிலையில் கையொப்பமிடுதல் வேண்டும்.

**விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

எனது அலுவலகத்தின் அலுவலரும், நான் தனிப்பட்ட வகையில் அறிந்தவருமான திருமதி/செல்வி ................................... ............ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை இத்தால் உறுதிசெய்கின்றேன்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

**திணைக்கள தலைவரின் சான்றிதழ்**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்களை பரிசீலனை செய்ததாகவும், அவை உண்மையானவை என்றும், உரிய பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதென்றும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும், விண்ணப்பதாரர் முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுவதாகவும்,

(ii) விண்ணப்பதாரி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவர் என்றும்

சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரையை பதிக்கவும்.)

பதவிப் பெயர் :----.
திகதி :----.

8-800

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.